ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2378/35 - 2024 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2024.04.05

*2378/35 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்***

*53 ஆம் பிரிவின் கீழ் கட்டளை*

*2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 53 இன் அடிப்படையில் (சட்டம்) எனக்கு உரித்தளித்துள்ள தத்துவங்களின் பயனால், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பரிந்துரையைக் கருத்திற் கொண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைக் கருத்திற் கொண்டும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான் இக்கட்டளை மூலம் பின்வருமாறு பிரகடனப்படுத்துகின்றேன்-*

(அ) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரம் ஒன்றாக அட்டவணை I இல் குறிப்பிட்ட அங்கீகரிக்கப்பட்ட நபரின் வியாபாரத்தின் நியமனத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் இல. 24/0538/631/011, 2024.03.25 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அத்தகைய வியாபாரத்தை செயல்நுணுக்க இரண்டாம் நிலை வியாபாரம் ஒன்றாக கருதுவதற்கான காரணம் இதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டவாறாக இருக்கும்.

(இ) சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட வாறு இருக்கும்.

(ஈ) சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் ஆரம்பிக்கின்ற மற்றும் முடிவடைகின்ற திகதிகள் அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்டவாறு இருக்கும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,

*2024, ஏப்பிறல் 03.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை I

### செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபரம் ஒன்றாக நியமிக்கப்பட்ட வியாபாரத்தின் விபரங்கள்

| | |
|---|---|
| 1. அங்கீகரிக்கப்பட்ட நபரின் பெயர் | கோட்ஜென் இனோவேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் |
| 2. உரிம இல: | 2302130001 |
| 3. கரைகடந்த கம்பனி பதிவு இலக்கம்: | PCC00271314 |
| 4. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரத்தின் வகைப்படுத்தல் | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரம் |
| 5. விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களுக்கான தகுதி | கோட்ஜென் இனோவேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக மாத்திரம் நியமிக்கப்பட்டுள்ளது என்பதோடு அது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரமாக நியமிக்கப்படவதற்கு தகுதி பெறமாட்டாது. |
| 6. தகைமை | 2023, ஓகத்து 04 ஆம் திகதியுடைய 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2023ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்களை அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குதல் பற்றிய வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதிகளின் 4(2)(ஈ) மற்றும் 4(3)(ஆ) ஒழுங்குவிதிகளின் கீழ் விபரிக்கப்பட்ட தகுதிவிதிகள். |
| 7. ஏற்புடைய விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் திட்டங்கள் | 2023ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத் துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு - விலக்களிப்புக்களை அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குதல் தொடர்பான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதியின் 5 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட திட்டம் |

## அட்டவணை II

### செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகம் ஒன்றாக கருதப்படுவதற்கான காரணம்

2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 53(5) இல் குறிப்பிடப்பட்டவாறு தேசிய அக்கறை அல்லது தேசிய பொருளாதாரத்தின் மேம்பாடு என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, கொழும்புத் துறைமுக நகரத்தை ஸ்தாபிக்கின்ற வெற்றியை உறுதிப்படுத்தவதற்காக செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமாக வியாபாரங்களை நியமிப்பதில் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 5 இல் குறிப்பிடப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

கோட்ஜென் இனோவேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் என்பது இலங்கையில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும் என்பதோடு அது மென்பொருள், தரவு விஞ்ஞானம், வடிவமைப்பு மற்றும் வன்பொருள் உள்ளடங்கிய தொழில்நுட்பத் தீர்வுகளில் விசேடத்துவம் பெற்ற கோட்ஜென் குரூப் இருபது வருடங்களுக்கும் மேலாக அதிநவீன தொழில்நுட்பத்தீர்வுகளை வழங்குவதில் புகழ் பெற்றுள்ளதுடன் இலங்கை, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, யுனைடட் அரப் எமிரேட்ஸ் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் அலுவலகங்களைக் கொண்டு போர்சூன் 500 நிறுவனங்கள் உட்பட உலகலாவிய புளூ சிப் கூட்டுத்தாபனங்களுக்கு சேவை வழங்குகின்றது. கோட்ஜென் ஒரு முன்னணி மென்பொருள் நிறுவனமாக அதன் அந்தஸ்தினைச் சர்வதேச ரீதியில் முன்னணி உலகளாவிய வர்த்தக நாமங்களை நாட்டிற்குள் ஈர்த்துத் தன் பெயரையும் தக்க வைத்துள்ளது என்பதுடன் இலங்கையை அபரிமிதமான தீர்வுகளுக்கான முடிவெடுக்கும் ஒரு மையமாக மாற்றுகின்றது.

ஐக்கிய அமெரிக்க டொலர் 500,000.00 ஆரம்ப முதலீட்டுடன், குறிப்பாக வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் வருமானம் பிறப்பித்தல் ஊடாக கொழும்புத் துறைமுக நகரத்திற்கும் மற்றும் ஒட்டு மொத்தமாக முழு இலங்கைக்கும் வெளிநாட்டு நாணயம் உட்பாய்ச்சப்படுவதற்கு குறிப்பாக பங்களிப்புச் செய்வதற்கு கோட்ஜென் இனோவேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் எதிர்பார்க்கின்றது என்பதோடு அது 5 வருடங்களில் அண்ணளவாக 15 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் பிறப்பிப்பதற்கு மதிப்பிட்டுள்ளது. கோட்ஜென் இனோவேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் பிரயாணம், விவசாயம், வாகனம், சக்தி, போக்குவரத்து, கல்வி, சில்லறை வியாபாரம் மற்றும் சுகாதாரம் போன்ற கைத்தொழில்களுக்கு அதன் சேவைகளை வழங்கும்.

கோட்ஜென் இனோவேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் செயல்நுணுக்க கவனம் இலங்கையில் சிறந்த தொழில்நுட்ப திறன்களை வளர்க்கும் அதே வேளையில் உலகளாவிய விரிவாக்கத்தை மையப்படுத்தியுள்ளது. தொடக்கத்தில் 100 திறன்சார் நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்து, அடுத்த 5 ஆண்டுகளில் அண்ணளவாக 400 திறன்சார் நிபுணர்களை விரிவுபடுத்தும் இலக்குடன், கோட்ஜென் இனோவேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் முதன்மையாக பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களில் முதலீடு செய்யும் அதேவேளையில், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குக் கணிசமான பங்களிப்பை வழங்குவதற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் வருமான வாய்ப்புகளை வழங்கும்.

**அட்டவணை III**

**சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்படுகின்ற விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்**

| *சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்ட வாறான சட்டவாக்கங்கள்* | *வழங்கப்படுகின்ற விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்* |
|---|---|
| 1. 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | அ) பகிர்ந்தளிக்கப்படுகின்ற சகல வருமானம், இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பவை இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படும்.<br>ஆ) மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுப்பனவுகளும் இந்த சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகள் மற்றும் சகல உள்நாட்டு கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட வரிகளிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 5. 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகள் மற்றும் சகல உள்நாட்டு கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 6. சுங்க கட்டளைகள் சட்டம் (அத்தியாயம் 235) | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 7. 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்களின் சகல இறக்குமதி களும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| **அறவீட்டுச் சட்டம்** | |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்ககளின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 9. 1988ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க பந்தயம் மற்றும் விளையாட்டு அறவீட்டுச் சட்டம் | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட மாட்டாது. |

| | |
|---|---|
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும் |
| 11. கேளிக்கை வரி கட்டளைகள் சட்டம் (அத்தியாயம் 267) | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்படமாட்டாது |
| 12. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டம் | 2022 யூன் 3ஆம் திகதியுடைய 2282/59 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டு நாணய மாற்றல் (கொழும்புத் துறைமுக நகரத்தில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் தவிர இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 13. 2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கெசினோ வியாபார (ஒழுங்குவிதி) சட்டம் | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்படமாட்டாது |

**அட்டவணை IV**

**வழங்கப்படுகின்ற விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்களின் செல்லுபடியாகும் காலம்**

| சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள் | ஆரம்பிக்கின்ற திகதி | முடிவடைகின்ற திகதி |
|---|---|---|
| 1. 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 10 | 2049, ஏப்பிறல் 09 |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 10 | 2049, ஏப்பிறல் 09 |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 10 | 2049, ஏப்பிறல் 09 |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 10 | 2049, ஏப்பிறல் 09 |
| 5. 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024, ஏப்பிறல் 10 | 2049, ஏப்பிறல் 09 |
| 6. சுங்க கட்டளைகள் சட்டம் (அத்தியாயம் 235) | 2024, ஏப்பிறல் 10 | 2049, ஏப்பிறல் 09 |
| 7. 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | 2024, ஏப்பிறல் 10 | 2049, ஏப்பிறல் 09 |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | 2024, ஏப்பிறல் 10 | 2049, ஏப்பிறல் 09 |
| 9. 1988ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க பந்தயம் மற்றும் விளையாட்டு அறவீட்டுச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024, ஏப்பிறல் 10 | 2049, ஏப்பிறல் 09 |
| 11. கேளிக்கை வரி கட்டளைகள் சட்டம் (அத்தியாயம் 267) | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 10 | 2049, ஏப்பிறல் 09 |
| 13. 2010ஆம் ஆண்டின் 17ஆம்இலக்க கெசினோ வியாபார (ஒழுங்குவிதி) சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

EOG 04 - 0042

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.